**சுருக்கம்**

போக்குவரத்து - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை – திண்டுக்கல் மண்டலம் - குமுளி பணிமனைக்கு சொந்தமான 1.07 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் கட்டுதல் – வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியம் (Infrastructure & Amenities Fund) வாயிலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 4.50 கோடி நிதியை ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**போக்குவரத்து (பி2)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 131** | **நாள். 31.12.2022**
**சுபகிருது, மார்கழி,16**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டவை:**

1) மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை அவர்களின் கடித எண். பொறி/49/2020, நாள். 16.09.2020.

2) முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்களுக்கு முகவரியிட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அவர்களின் கடித எண். 20728/ 2020/NPD, நாள். 12.01.2021

*****

**ஆணை:-**

30.04.2022 அன்று தேனி மாவட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதிக அளவில் பயணியர் வந்து செல்லக்கூடிய குமுளி பேருந்து நிலையம் மேம்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலத்திற்கு சொந்தமான 1.07 ஏக்கர் பரப்பளவு கொண்ட குமுளி பணிமனை காலி இடத்தில் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் கட்டும் திட்டத்திற்கு சுமார் ரூ. 4.50 கோடி நிதி தேவைப்படுவதால் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியம் (Infrastructure & Amenities Fund) வாயிலாக நிதி வழங்குமாறு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையை கேட்டு பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள், மேலே குறிப்பிட்டுள்ள 1.07 ஏக்கர் பரப்பளவு கொண்ட குமுளி பணிமனை காலியிடத்தில் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் கட்டும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியம் (Infrastructure & Amenities Fund) வாயிலாக சுமார் ரூ.4.50 கோடிக்கு சுற்றோட்டக் குறிப்பின் மூலம் மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதி குழு ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

4. மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை அவர்களின் கோரிக்கையினை அரசு கவனமாக பரிசீலித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம் குமுளி பணிமனைக்கு சொந்தமான 1.07 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பணிமனையுடன் கூடிய பேருந்து

(த.பி.பா)

நிலையம் கட்டும் திட்டத்திற்கு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியம் [Infrastructure & Amenities Fund ] வாயிலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 4,50,00,000/-க்கு (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும் மற்றும் நடப்பு நிதி ஆண்டிற்கு (2022-2023) ரூ. 1,00,00,000/-க்கு (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு இதன்வழி ஆணையிடுகிறது. மீதித் தொகை வரவிருக்கும் நிதி ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

5. மேலே பத்தி 4 –ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

I. 3055 – 00 – சாலைப் போக்குவரத்து – 800 – ஏனைய – செலவு – மாநிலச் செலவினங்கள் – AP – தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு உள் கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து உதவி – 309 – உதவித் தொகை – 02 – மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை

(IFHRMS த.தொ.கு: 3055 00 800 – AP – 309 02)

II. மேலே பத்தி 4 –ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியில் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் சரிசெய்யப்பட வேண்டும்.

3055 – 00 – சலைப் போக்குவரத்து – 902 – கழிக்கவும் - காப்பு நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – மாநிலச் செலவினங்கள் – AA – மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 330 – கணக்குகளிடையே மாற்றம் – 01 – கணக்குகளிடையே மாற்றம்

(IFHRMS த.தொ.கு: 3055 00 902 – AA – 330 01)

III. மேற்படி ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் எதிர் பற்று வைக்கப்பட வேண்டும்.

J. வைப்பு நிதி (b) வட்டி பெறாத வைப்புநிதி – 8229 – 00 – வளர்ச்சி மற்றும் நல நிதி – 200 – ஏனைய வளர்ச்சி மற்றும் நலநிதி - AZ – மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி – 802 – வழங்குதல் – 02 – வட்டி பெறாதவை.

(IFHRMS த.தொ.கு: 8229 00 200 AZ 802 02) (Outgo)

6. மேற்கூறிய புதிய கணக்கு தலைப்பிற்கு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்து துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை, மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. பத்தி 4 –ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்காக சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ.1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963 –ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வ.செ.பொ.1)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல்

(த.பி.பா)

**(அரசாணை (நிலை) எண். 131, போக்குவரத்து (பி2)த் துறை, நாள். 31.12.2022)**

செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022 – 2023 –ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பொ.ப-1/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண். 54152/நிதி(பொ.ப1)/2022, நாள். 29.12.2022-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2170 (இரண்டாயிரத்து நூற்று எழுபது)

IFHRMS ASL No. 2022122170

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே. கோபால்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (நிதி, திட்டம் மற்றும் மனிதவள மேலாண்மை,
ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை, அவர்களின்
தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.
வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாநில கணக்காயர், சென்னை-8 / 35.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை.
துணை கருவூல அலுவலர், மதுரை.
நிதி (பொ.ப.1/வ.செ.பொது.1/ வ.செ.பொது.2) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

N. [signature] 31/12/22

**பிரிவு அலுவலர்**